# அகநானூற்றில் குடியிருப்புச் சமூகம்

முனைவர் கி.ஜா.பிரிசில்லா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஏ.டி.எம்.மகளிர் கல்லூரி, நாகப்பட்டினம்

128

**முன்னுரை**

பண்டைய தமிழரின் வாழ்வியல் சூழல் நில அமைப்பின் அடிப்படையில் பருவ சூழ்நிலைக்கு ஏற்பவும் அமைந்துள்ளன. நில அமைப்பிற்கேற்ப அவர்கள் தங்கள் இருப்பிடங்களை அமைத்துக் கொண்டனர் ;. அது போன்றே நில சூழல்களுக்கு ஏற்ப தொழில் முறைகளையும் மேற் கொண்டனர். ஐவகையான குறிஞ்சி , முல்லை, மருதம்,நெய்தல், பாலை என்னும் நில பாகுபாடும் , முன்பனி பின்பனி, இளவேனில், முதுவேனில், கார் .கூதிர் ஆகிய பருவங்களும் மக்களின் வாழ்வியல் சூழல் மாறுபாட்டிற்குக் காரணமாக அமைந்தன.நில அடிப்படையிலும் குடியிருப்புக்கள் ஒவ்வொரு திணைக்கும் மாறுபட்டுக் காணப்படுகின்றன.

**குறிஞ்சி நில குடியிருப்பு**

சங்க காலத்தில் மலைப்பாங்கான பகுதிகளில் குறிஞ்சி மலர்கள் நிறைந்துக் காணப்பட்டன. எனவே இப்பகுதியை குறிஞ்சி எனப் பெயரிட்டு அழைத்தனர்.பின்பு குறிஞ்சி என்பது மலையும் மலைச் சார்ந்த பகுதிகளையும் குறிக்கலாயிற்று .மலையும் மலைச் சார்ந்த பகுதியுமாகக் காட்சியளித்த குறிஞ்சி நிலத்தில் மக்கள் வாழ்வியல் நிமித்தமான புணர்தலும் புணர்தல் நிமித்தமும் உருக்கொள்ள ஆரம்பித்தன.

குறிஞ்சி நில மக்கள் நாடோடிகளாய் சுற்றி திரிந்த காரணத்தினால் காய் , கனி, கிழங்கு,இறைச்சி போன்றவை எளிதில் கிடைத்தன. இயற்கை உணவு அனைத்து காலங்களிலும் கிடைக்கப் பெறாமையால் மாற்று உணவுக்கு அவசியம் ஏற்பட்டது. அதனால் மக்கள் ஒரே இடத்தில் தங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டு தானியங்களை உற்பத்தி செய்தனர்.இதன் காரணமாக அம்மக்களிடையே இடம் பெயர்தல் எனும் வாழ்க்கை முறை மாறி நிலைகொள்ளத் தொடங்கியது.இது தொடங்கிய நிலையில் குறிஞ்சி வாழ் மக்களிடையே சமுதாயம் என்னும் கட்டமைப்பு உருவாகியது. குறிஞ்சி நிலத்தலைவனைக் '**குன்றநாடன்**'என்ற சொல்லால் அழைத்ததை,

**"இன்துனைப் பயிரும் குன்றநாடன்" (அகம். 352:7)**

என்ற பாடல் வரியின் மூலம் அறியமுடிகிறது.மலைப் பகுதியில் கிடைக்கும் புல்லினைக் கொண்டு குறிஞ்சி நில மக்கள் கூரைகளை வேய்ந்தனர்.

**"புல்வேய் குரம்பை புலர ஊன்றி" (அகம். 172:10)**

கூரை வேய்ந்த குடிசைகளில் வாழ்ந்த மக்கள் ஒரு புறம் இருக்க வசதியும் ,பாதுகாப்பும் நிறைந்த மாளிகைகளை அமைத்துக்கொண்டு வாழ முற்பட்டனர். தலைவி தன்னுடைய தந்தையின் நீண்ட மாளிகையில் இருந்தாள் என்பதை,

**"தந்தை**

**நெடுநகர் ஒரு சிறை நின்றனென்" (அகம். 162:8-9)**

என்ற பாடலில் குறிப்பிடுகின்றது. குறிஞ்சி நில குடில்கள் விலங்குகளின் தோலை விரிப்பாக பயன்படுத்தியுள்ளனர். குறத்தியின் தந்தை புலித்தோலைப் பயன்படுத்தியுள்ளதை ,

**"விரிஅதன் படுத்த சேக்கை, தெரி இழைத்**

**தேன்நாறு கதுப்பின் கொடிச்சியர் தந்தை"(அகம். 58:4-5)**

என்ற இப்பாடலடியின் மூலம் அறியலாம். குறிஞ்சி நில மக்கள் கூடி வாழும் சமூகத்தை விரும்பினர். அனைவரும் ஒன்றுபட்டு வாழும் நிலையில் அம்மக்களுக்குப் பாதுகாவல் இன்றியமையாத ஒன்றாகியது.அதனால் ஊரினைக் காவல் செய்ய காவல் செய்ய காவலர்கள் இருந்தனர். இதனை ,

**"துஞ்சாக் கண்ணார் காவலர் கடுகுவா" (அகம். 58 :4-5)**

என்ற பாடலடியின் மூலம் அறியலாம்

**முல்லை நிலக்குடியிருப்பு**

மலை சார்ந்த பகுதியில் வாழ்ந்த மக்கள் தம் அடிப்படை வசதிகளை மேலும் பெருக்கிக் கொள்ளப் பரந்து விரிந்த கிடந்த காட்டுப் பகுதிகளுக்குக் குடி பெயரலாயின.இப்பகுதியிலேயே சிலர் தங்களுக்கு நிலையானப் பகுதிகளை அமைத்துக்கொண்டனர். "முல்லை நில வாழ்வுதான் மக்களின் சிறந்த வாழ்வுக்கு அடிப்படை என்று கூறலாம். ஒருவனுக்கு ஒருத்தி என்னும் வாழ்கை முறையும் இந்நில வாழ்விலே தான் தொடங்கியது"(சதாசிவம் .பழந்தமிழர் வாழ்வும் வரலாறும் ,ப.24) இயற்கை வளம் நிறைந்த காடுகளைக் கெண்டது முல்லை நிலச்சமுதாயம்.இங்கு வாழும் மக்கள் குழுக்களாக ஒன்றுகூடி வாழும் முறையைப் பின்பற்றினர். இவையே மனித நாகரீக முறைக்கு வித்திட்டது எனலாம்.

குன்றின் அடிவாரத்தில் அமைந்த சிற்றூர்களில் முல்லை நில மக்கள் தங்கள் வாழ்க்கை முறையை நடத்தினர் என்பதை

**"புன்புலம் தழீஇய பொறைமுதல் நிறுகுடி"(அகம்.284:7)**

என்ற பாடல் வரி புலப்படுத்துகிறது.முல்லை நில மக்களில் செல்வந்தர்கள் ஏழைகள் என மக்கள் கலந்துக் காணப்பட்டனர். செல்வந்தர்கள் வாழும் பகுதியி pல் காவல் செய்வோர் இரவு முழுவதும் கையில் விளக்கினை ஏந்தி மதில் சுவரில் இருந்து ஊர்க்காவல் பணியினை மேற்கொண்டனர்.இதனை ,

**"அருங்கடிக் காப்பான் அஞ்சுவரு மூதூர்"(அகம்.114:12)**

என்ற பாடல் வரி மூலம் அறிய முடிகின்றது.

**மருத நிலக்குடியிருப்பு**

மருத நில மக்கள் மற்ற நநிலத்தவரைக் காட்டிலும் செல்வ நிலையில் மேம்பட்டிருந்தனர்.இங்கு தான் ஊர்ப் பெருக்கமும் நகர அமைப்பும் கால் கொள்ளத் தொடங்கியது. இதற்கு அடிப்படைக் காரணம் தொழில் முறையும் இயற்கை அமைப்பும் ஆகும். "மனிதனுடைய நாகரீகம் படிப்படியாக வளர்ச்சியுற்று மருத நிலத்தில் முடிவடைந்தது " சதாசிவம் .பழந்தமிழர் வாழ்வும் வரலாறும் ,ப.24) இத்தகைய முறையில் காணப்பட்ட மருதநில குடியிருப்புக்கள் அனைத்தும் தெருக்களாக காணப்பட்டன.மருத நில தெருக்களில் இளம்வெயிலில் நெற்கூடுகள் காய்வதை

**"பழன யாமை பசு வெயில் கொள்ளும்**

**நெல்லுடை மறுகின் நன்னர் ஊர"(அகம்.306:7-8)**

இப்பாடல் வழி அறியலாம். ஓளிப் பொருந்திய அணிகலன்களை அணிந்த பரத்தை மகளீர் இருந்த பகுதி சேரி என்று குறிப்பிடப்பட்டதை

**"ஒன் இழை மகளீர் சேரி" (அகம்.146:6)**

இப்பாடல் வரி மூலம் அறியலாம்.

**நெய்தல் நில குடீயிருப்பு**

நெய்தல் நிலவாழ் மக்களின் வாழ்வியல் முறையை "இரண்டாம் நூற்றாண்டிலும் அதற்கு நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னரும் இருந்தனவாக இலக்கியங்களில் கூறப்படும் இதே நிலை தான் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் குடிசைகள் பரதவர் சிற்றூர்களிலும் காணப்படுகின்றன "(விவேகலதா, சேனைத் தலைவர் வாழ்வியல் ,ப.14) என்று விவேகலதா , எடுத்துரைக்கிறார். இவர் கூற்றானது நெய்தல் நில மக்களின் ஏழ்மை நிலையையும் அவர்களின் கடல் சார்ந்த பகுதிகளில் வாழும் வாழ்வியல் சூழலையும் ஒருமுகப்படுத்துகின்றுது.

பரதவர் ஊர் குறிப்பிடப்படும் இடத்தில் அந்த ஊரினது தெருக்கள் முழுவதும் புலால் நாற்றம் வீசிக்கொண்டே இருக்கும். ஒரு நாள் தங்கியிருப்பவர்களுக்கு மறுநாள் தம் ஊரையே மறந்திடச் செய்யும் தன்மையைக் கொண்டது பரதவர் சேரி என்பதை

**"புலால் அம் சேரிப் புல்வேய் குரம்பை**

**ஒரு நாள் உறைந்திசி னோர்க்கும் வழி நாள்"(அகம்.200:2-5)**

என்ற பாடல் வழி அறிந்துக் கொள்ளலாம்.

நெய்தல் நிலவாழ் மக்கள் கடற்கரை சார்ந்த நிலப்பகுதிகளில் பெருங்கூட்டமான குடில்களை அமைத்து வாழ்ந்ததை

**"பரதவர் கானலம் சிறுகுடி"(அகம்.250:11)**

இப்பாடல் வழி அறியலாம். நெய்தல் நிலத்தவர் குடியிருப்புக்கள் '**சிறுகுடி**'என சுட்டப்படுகின்றது .நெய்தல் நில மக்கள் தங்கள் ஊரின் கண் தாழை வேலியையுடைய தோட்டங்களை அமைத்துக் கொண்டதை

**"கைதை அம் படப்பை எம் அழுங்கல் ஊரே"(அகம்.100:18)**

என்ற பாடல் வழி அறியலாம்.பரத்தை வாழ்ந்த பகுதி சேரி என்று அழைக்கப்பட்டதை

**"ஊரும் சேரியும் உடன் இயைந்து அலர் எழு"(அகம்.220:1-2)**

என்ற இப்பாடல் எடுத்துரைக்கின்றது. நெய்தல் நில மக்கள் வாழ்ந்த தெருக்கள் மணலால் மிகுந்தும் குடிசைகள் புல்லால் வேயப்பட்டும் காணப்பட்டதை

**"நிலாவின் இலங்கு மணல் வேலி மறுகில்**

**புலால் அம் சேரி புல்வேய் குரம்பை"(அகம்.200:1-2)**

இப்பாடலடிகள் புலப்படுத்துகின்றன. இந்நில மக்கள்மாட மாளி ;கைகளோ பெரிய வீடுகள் கட்டி வாழ்ந்ததாகவோ செய்திகள் இடம் பெறவில்லை. பெரிய கடலிடத்து மீன் பிடிக்கும் தொழிலையுடைய பரதவர் சிறிய குடிசையில் வாழ்ந்ததை

**"பெருய்கடல் வேட்டத்துச் சிறுகுடி பரதவர்"(அகம்.140:1)**

என்ற பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பாலை நில குடியிருப்பு**

பாலை நிலம் பற்றி முத்தையா "பாலைக்கு நிலம் இல்லை என்பர்.ஆயின் நிலக்கலப்பை அதற்கு நிலமாகும். நூல் நிலங்களும் தம் இயற்கை திரிந்துப் பாலையாகும் என்றலுமுண்டு "(சங்க கால மறவர்,ப.21)என்று குறிப்பிடுகின்றார். வறண்ட பாலை நிலத்தில் வாழ்ந்த மக்களை எயினர் , எயிற்றியர், மறவர் , மறத்தியர் என்று பெயரிட்டு அழைத்தனர்.

பாலை நில மக்களின் தொழில் வழி ;ப் போவோர்களை துன்புறுத்தும் பொருட்டு காணப்படும். மழை வளம் இல்லாமல் வறண்டு கிடக்கும் பாலை நிலத்தின் வழியே செல்வோர் கள்வர்களின் அச்சம் மிகுதியால் இப்பகுதியை கடந்துச் செல்வர்.பாலை நில மக்களில் எயினர்கள் பாதுகாப்பாக குறும்புகளில் (சிறு அரண்களில்) வாழ்ந்தனர் என்பதை

**"கொடுவில் எயினர் குறும்பிற்கு ஊக்கும்"(அகம்.319:3)**

இப்பாடல் வரி குறிப்பிடுகின்றது. பாலை நில வேடர்கள் தேக்கின் இலையை கவிழ்த்த புதர் இலைப் போன்று காட்சியளித்ததை,

**"--------------------------------------------------தேக்கின்**

**அகலிகை குவித்த புதல் போல் குரம்பை"(அகம்.315:15-16)**

இவ்வரிகள் புலப்படுத்துகின்றன.பாலை நில சிற்றூர்களில் மன்றங்கள் காணப்படும். மன்றத்து நிழலில் பாலை நில மறவர்கள் படுத்துறங்குவதை

**"தொன்று இயல் சிறுகுடி மன்று நிகழ்படுக்கும்"(அகம்.75:7)**

இவ்வரி உணர்த்துகின்றது.கொடுமையான வெப்பத்தையுடைய பாலை நில மக்களில் சிலர் வேறு ஊர்களுக்கு பிழைப்புத் தேடி செல்வர். மற்றவர்கள் அவ்வூரின் கண் தங்கியிருப்பர். இத்தகைய வாழ்வியலையுடையது பாலை நில குடியிருப்புச் சமூகம் ஆகும்.

**முடிவுரை**

பண்டைத் தமிழரின் வாழ்வியல் சூழல் நில அமைப்பின் அடிப்படையில் பருவ சூழ்நிலைக்கு ஏற்பவும் அமைந்துள்ளன.நில அமைப்பிற்கேற்ப அவர்கள் தங்கள் இருப்பிடங்களை அமைத்துக் கொண்டனர்.அதுபோன்றே நில சூழல்களுக்கு ஏற்ப தொழில் முறைகளையும் மேற் கொண்டனர்.சங்க கால மக்கள் நிலையான குடியிருப்புக்களைக் கொண்டிருந்தனர். குடியிருப்புக்கள் குறிஞ்சி நில குடியிருப்பு , முல்லை நில குடியிருப்பு , மருத நில குடியிருப்பு , நெய்தல் நில குடியிருப்பு , பாலை நில குடியிருப்பு என நிலவியல் அமைப்பில் அமைந்துள்ளதை அறிய முடிகின்றது.

**பார்வை நூல்கள்**

1. சதாசிவம் .பழந்தமிழர் வாழ்வும் வரலாறும் , செம்மூதாய் பதிப்பகம் 2012

2. விவேகலதா, சேனைத் தலைவர் வாழ்வியல் ,காவ்யா பதிப்பகம் 1998

3. முத்தையா.சு.சங்க கால மறவர், காவ்யா பதிப்பகம் 1999



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599